# வீழ்ச்சி

இதை வாசிக்கும் என் அன்பு சகோதரனே/சகோதரியே, உன் வாழ்க்கையில் அநேக நேரங்களில் வீழ்ச்சியினால் சோர்ந்து போய் இருக்கிறாயா. இல்லையென்றால் உன் வீழ்ச்சியையே உன்னால் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறாயா. இன்றைக்கு அறிந்து கொள். வீழ்ச்சி என்பது மாம்சத்தில் மாிப்பதல்ல; மாறாக, **வீழ்ச்சி என்பது முதலாவது உன் சிந்தனையில் தோன்றி உன் மாம்சத்தை செயல்பட வைக்கும்.** எப்படியென்றால் இந்த உலகத்தில், உன் கண் விரும்பும் ஒரு காரியத்தை அல்லது நபரை, அடைவதற்காக எதிர் காலங்களை மறந்தவர்களாக எவ்வளவேனும் யோசிக்காமல், செயல்பட ஆரம்பித்து விடுகிறாய்.



ஒரு வேளை, நீங்கள் சொல்லலாம், யாரும் செய்யாத ஒன்றையா நான் செய்கிறேன் என்று. எல்லோருமே செய்வதினால் ஒரு தவறு என்றைக்கும், சரி என்று ஒப்புக்கொள்ளபடாது. மேலும், அது உன் எதிர் கால கனவுகளையெல்லாம் ஒன்றும் இல்லாமல் செய்து விடும். குறிப்பாக, ஒரு காரியத்தினால் ஏற்படும் விளைவு, ‘‘அந்த காரியம் நடக்கும் போது அல்ல, அது முடிந்த பிறகே தெரியும். எப்படியென்றால், நான் இன்னும் நன்றாக படித்திருக்கலாம் என்ற எண்ணம், தேர்வு முடிவை நாம் பார்க்கும் போதே தோன்றும். அதே போல தான், ஒரு ஆணையோ, பெண்ணையோ, நீ பார்க்கும் போது, அல்லது உன் கண்களுக்கு அழகாய் தோன்றும் போது, அதன் பின் வரும் பாதிப்புகளை குறித்து உனக்கு கவலை ஏதும் இல்லை, நீ அவற்றை பற்றி அறிந்து கொள்ள விரும்புவதும் இல்லை. அழகாய் தோன்றும் ஆணோ, பெண்ணோ, உன் சிந்தனையில் இருக்கும் போதே, அவன்/ அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது என்ற நிலைக்குள்ளாக தள்ளப்படுகிறாய். பிறகு, தனிமையில் பேசுவது, பழகுவது, போன்ற காரியங்களில் உன்னை ஈடுபடுத்தி கொள்ள தொடங்கி இந்த உலகமே அவன்/அவள் என்ற நிலைக்கு வருகிறாய். ‘‘**எந்த ஒரு காரியத்தை செய்யாமல், உன்னால் இருக்க முடியவில்லையோ, அதற்கு நீ அடிமையாகியிருக்கிறாய்**’’. இதனால், உன் வாழ்க்கையில் மற்ற எந்த காரியத்திலும் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. மேலும் அது உன் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்குகிறது. எங்கும் தோல்வி, எதிலும் தோல்வி என்று உன் வாழ்க்கை மாற ஆரம்பிக்கிறது. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்ற பயத்தோடு கூட எல்லாவற்றையும் செய்ய ஆரம்பிக்கிறாய்.

அன்பு சகோதரனே, சகோதரியே, வீழ்ச்சி என்று தெரிந்தும் அதிலிருந்து வெளியே வர முடியாமல் தவிக்கிறாயோ. உன் பெற்றோருக்கும் மற்ற யாவருக்கும் உண்மையாய் இருக்க முடியவில்லை என்று தனிமையில் கண்ணீர் சிந்துகிறாயோ. நீ செய்வது தவறு என்று தெரிந்தும், அதிலிருந்து வெளியே வர முடியாமல் தவிக்கிறாயோ. உனக்கு உதவி செய்ய இயேசு இருக்கிறார். இந்த காரியத்தில் அவரால் எனக்கு எப்படி உதவ முடியும் என்று நினைக்கிறாயோ. நீ படித்து கொண்டிருக்கிற இந்த பிரதியை உன் கையிலே கொண்டு வந்ததில் இருந்து புரியவில்லையா, அவர் உனக்கு உதவுவதற்காகவே வந்திருக்கிறார் என்று, ஆம் இயேசு உன்னை நேசிக்கிறார். அவருடைய நேசத்தை எவ்வாறு வெளிபடுத்தினார் என்று தெரியுமா, சிலுவையில் உனக்காக தன்னுடைய கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி, என் மகன்/ மகள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன்னையே ஒப்புக்கொடுத்தார். தம்பி / தங்கச்சி இயேசு உனக்காக செய்ய வேண்டியதெல்லாம் செய்து முடித்து விட்டார். இப்போதும், நீ செய்ய வேண்டிய ஒன்று இருக்கிறது, அவரை உன் உள்ளத்தில் வாரும் என்று அழைத்து, என்னை மன்னியும் என்று ஒரு வார்த்தை சொல்லும் போது, ஒரு புதிய மனிதனாகவும், ஒரு புதிய வாழ்வுக்குள்ளாகவும் நீ கடந்து செல்லுகிறாய். உன் உள்ளம் இந்த சுத்தமான வாழ்க்கையை விரும்பினால், உன் உள்ளத்திலிருந்து பின் வரும் வார்த்தையை சொல்வாயா....

அன்பு இயேசுவே, நான் செய்த தவறுக்காக நீங்க மரித்தீங்க என்பதை புரிந்து கொண்டேன். என் உள்ளத்தில் வாங்க, என் வாழ்க்கையை மாற்றுங்க, இன்றிலிருந்து ஒரு புதிய வாழ்க்கையை வாழ எனக்கு உதவி செய்யுங்க. இனி வீழ்ச்சி என்பது என் வாழ்க்கையில் இல்லாத படி எப்பொழுதும் ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ உதவி செய்யுங்க ஆமென்.


தொடர்புக்கு :

END TIME WARRIORS

CELL : 7667995892

Email:endtimewarriors17@gmail.com



Diocesan Offset Press, Ph. 2573182



பின்பக்கம் பார்க்க